T/Kin/Al-Ahla Vidyalayam

# தி/கிண்/அல்-அஹ்லா வித்தியாலயம்

## முதலாம் தவணை முன்னோடிப் பரீட்சை

## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம்-07/2020/** **நேரம்:02.00 மணித்தியாலயம்**

பெயர் :.................................... புள்ளிகள்:

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக?

1. ஏறாத மேடுகள் ஏறி வந்தேன். இங்கு **மேடு** என்பதன் ஒத்த சொல்?
   1. பள்ளம் 3. நதி
   2. குன்று 4. கடல்
2. ஆழி இறைவனைக் காணவந்தேன். இங்கு **ஆழி** என்பதன் ஒத்த சொல்?
   1. கடவுல் 3. கடல்
   2. நீர் 4. அணை
3. சூரர்கள் இவ்வுலகில் இருக்கிறார்கள். இங்கு **சூரர்கள்** என்பதன் ஒத்த சொல்?
   1. வீரர்கள் 3. பகைவர்கள்
   2. எதிரிகள் 4. நண்பர்கள்
4. அம்மா குழவிக்கு உணவு ஊட்டினாள். இங்கு **குழவி** என்பதன் ஒத்த சொல்?
   1. மகன் 3. பறவை
   2. மகள் 4. குழந்தை
5. அழகிய காட்சிகள் காண்பவரைக் களிப்படையச் செய்தன. இங்கு **களிப்பு** என்பதன் ஒத்த சொல்?
   1. மகிழ்ச்சி 3. பணம்
   2. கவலை 4. துக்கம்
6. நெஞ்சம் உலர்ந்த நெடு நரகில். இங்கு **உலர்ந்த** என்பதன் ஒத்த சொல்?
   1. வளர்ந்த 3. காய்ந்த
   2. சிறந்த 4. ஈரமான
7. எட்டு வயதுப் பேதை. இங்கு **பேதை** என்பதன் எதிர்ப்பாற் சொல்?
   1. பெண் 3. தையல்
   2. தங்கை 4. ஆண்
8. சூரியன் கிழக்கு வானில் உதித்தது. இங்கு **உதித்தது** என்பதன் எதிர்ச் சொல்,
   1. எழுந்தது 3. மறைந்தது
   2. தோன்றியது 4. பிரகாசித்தது
9. பரீட்சையில் வெற்றி பெறுவதே எனது நோக்கம். இங்கு **வெற்றி** என்பதன் எதிர்ச் சொல்லாக அமைவது?
   1. சிறப்பு 3. இகழ்
   2. புகழ் 4. தோல்வி
10. கமல் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தினான். இங்கு **மரியாதை** என்பதன் எதிர்ச் சொல் எது?
    1. அவமரியாதை 3. நன்றி
    2. அன்பு 4. மதித்தல்

T/Kin/Al-Aqsha National School

11. அந்தரே கதைகளை தமிழுக்கு மொழிபெயர்த்தவர் யார்?
    1. புருட்கோவ்
    2. எச்.எம்.பீ.மொஹிதீன்
    3. அந்தரே
    4. தெனாலிராமன்

12. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடத்தைப் படித்தனர். இவ்வாக்கியத்திலுள்ள எழுவாயைக் காண்க?
    1. மாணவர்கள்
    2. சென்று
    3. பாடத்தை
    4. படித்தனர்

13. சுகந்தன் வாடிய கீரையைப் பிடுங்கினான். இங்கு இடம் பெற்றுள்ள அடைமொழி?
    1. பிடுங்கினான்
    2. வாடிய
    3. சுகந்தன்
    4. கீரை

14. தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?
    1. 247
    2. 216
    3. 30
    4. 215

15. பின்வருவனவற்றுள் உயிர்க் குறில் எழுத்துக்களாக அமைபவை?
    1. ஆ , ஈ , ஊ
    2. மா , சா , ரா
    3. அ , இ , உ , எ , ஒ
    4. க , ச , ட , த

16. **களிறு** என்பதன் எதிர்ப்பாற் சொல்லாக அமைவது?
    1. நாகு
    2. பிடி
    3. பசு
    4. மேடு

17. **பேரன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்?
    1. புத்திரி
    2. மகள்
    3. பேத்தி
    4. செல்வி

18. மலரும் மாலையும் என்ற நூலை எழுதியவர் யார்?
    1. முற்றுப் புள்ளி
    2. வினாக்குறி
    3. காற்புள்ளி
    4. மெய்ப்பாட்டுக் குறி

19. சத்திய சோதனை எனும் நூலை எழுதியவர் யார்?
    1. மகாத்மா காந்தி
    2. ஹக்கீம் ஜீ
    3. இரவீந்திரநாத் தாகூர்
    4. தேசிக விநாயகம் பிள்ளை

20. காற்றுள்ள போதே தூற்றிக் கொள். என்னும் பழமொழி உணர்த்துவது?
    1. காற்று பலவீனமாக வீசும்.
    2. சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
    3. காற்று வீசும் போது தூற்ற வேண்டும்.
    4. காற்று அவசியமானது.

(20x2=40 புள்ளிகள்)

02) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக?

1. காடுகளின் முக்கியத்துவம்.
2. மகாத்மா காந்தி
3. பழைய குடையின் சுயசரிதை
4. இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்.

(20 புள்ளிகள்)

T/Kin/Al-Aqsha National School

03) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக?

- 2020/05/20ம் திகதி நடைபெற இருக்கின்ற இல்ல விளையாட்டுப் போட்டிக்கு வெளியு'ரில் கல்வி கற்கும் உமது தம்பிக்கு அழைப்பு விடுத்து கடிதம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

04) பின்வரும் வினாக்களுக்கு பாடநூலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக?

1. அந்தரேயின் தாயின் பண்புகளைப் பட்டியற்படுத்துக? அவர் சென்றுவந்த இடங்கள் 03 தருக?
2. காட்டில் காணக்கூடிய 05 மிருகங்களைத் தருக?
3. காந்தியடிகள் தங்கியிருந்த சிறைச்சாலையின் பெயர் என்ன? அவர் எழுதிய சுயசரிதை நூலின் பெயர் என்ன?

(3x5=15 புள்ளிகள்)

05) வசனம் அமைக்குக?

1. தாவித் தாவி.
2. மணல் மேடு.
3. தமிழ்ப் பாடம்
4. ஆசிரியர்.
5. அல்லும், பகலும்.

(5x2=10 புள்ளிகள்)

T/Kin/Al-Aqsha National School